## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,நத்தம்

| | |
|---|---|
| அ.வ.எண். 24/2022 | வா.சா. 1 |
| பெயர் : சண்முகம் | த/பெ. மாணிக்கம் |
| தாலுகா : நத்தம் (திண்டுக்கல்) | கிராமம் : செந்துரை |
| தேதி : 11.02.2026 | வயது : 50/2026 |

1969-ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 44-ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

**2 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

2) வழக்கு சொத்தை பொறுத்து எனது தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் இடையே பாகப்பிரிவினை நடந்ததாக எனது தரப்பில் ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை அசல் ஆவணம் எனது தந்தை வசம்தான் இருந்தது என்றாலும், 1ம் பிரதிவாதி வசம் இல்லை என்றாலும் சரிதான். நான் ஆறாம் வகுப்பு வரை படித்துள்ளேன். தமிழ் எனக்கு வாசிக்க தெரியுமா என்றால் தெரியும் வாசிக்க நேரம் ஆகும். வா.சா.ஆ.6 பாகப்பிரிவினை ஆவணத்தில் நமது சொத்துக்களுக்கு ஏற்பட்ட நடைபாதை பாத்தியம் இருவருக்கும் பொதுவானது என்று ஒரு பேனா மையினாலும் எழுதப்பட்டு பின்னர் இடைச்சொறுகளாக வண்டிப் பாதை என்று வேறு ஒரு பேனா மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒரே மையினால் தான் எழுதப்பட்டுள்ளது. இரண்டும் வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றாலும் வழக்கிற்காக இல்லை என்று மறுத்து பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

3) பொது நடைபாதை, வண்டி பாதை எந்த சொத்து வழியாக உள்ளது என்றும், யார் சொத்து வழியாக செல்லக்கூடியது என்றும் விபரங்கள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முழு சொத்திற்கும் தெற்கு பக்கத்தில் தான் வண்டி பாதை உள்ளது என்றாலும்,

வழக்கிற்காக வழக்கு சொத்து தான் பாதை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, தெற்கு பக்கம் உள்ள சொத்து முத்துலட்சுமி என்பவருக்கு பாத்தியமானது. வழக்கு மொத்த சொத்திற்கு தெற்கு புறமுள்ள முத்துலெட்சுமி மற்றும் அமல்ராஜ் சொத்து வழியாக சென்று தான் நான் எனது சொத்தை அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. சுமார் 40 வருடங்களுக்கு மேலாக நான் சொல்லும் வகையில் பாதையை பயன்படுத்தியிருந்தால் வருவாய்துறை ஆவணங்களில் பாதை என்பது துலங்கியிருக்கும் என்றாலும், அவ்வாறு எவ்வித பதிவும் இல்லை என்பதால் நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

4) எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் புளிய மரங்கள் உள்ளது என்றால் சரிதான். இந்த விபரங்களை நான் எனது பிராதில் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான். பெரிய புளிய மரங்கள் இருப்பதால் தற்சமயம் அந்த இடத்தில் வேறு விவசாய வேலைகள் இல்லை என்றால் சரிதான். புளிய மரங்களில் இருந்து வரும் புளியம்பழங்களை பறித்து வருமானம் பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு மூன்றாம் இலக்க சொத்தில் உள்ள வருமானங்களை எடுப்பதற்கு எந்த வழியாக சென்று வருகிறேன் என்றால் நான் ஒன்றாம் பிரதிவாதியின் சொத்து வழியாக சென்று அமல்ராஜ் என்பவரின் சொத்து வழியாக சென்று வருகிறேன். நான் வழக்கில் சொல்லியுள்ள விபரங்களுக்கு முரண்பட்டு சொல்கிறேன் என்றால் சரியல்ல 2ம் பிரதிவாதி வேலி அமைத்த பிறகு நான் மேற்சொன்ன வகையில் எனது சொத்திற்கு சென்று வருகிறேன்.

5) 2ம் பிரதிவாதி எந்த வருடம் அவரது சொத்துக்களை வாங்கினார் என்றும் எந்த வருடம் வேலி அமைத்தார் என்றும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும், 2021ம் வருடம் சொத்தை வாங்கினார். அவர் மேற்படி சொத்தை கிரையம் வாங்கிய சமயமே என்னுடைய சொத்தையும் கிரையம் கேட்டார் என்றாலும், தொகைகளில் சரிவராததால் நான்

மறுத்துவிட்டேன் என்றாலும் சரிதான், கிரையம் வாங்கியபிறகு என்னிடம் மேற்படி பேச்சுவார்த்தை நடத்தினார். கிரையம் வாங்கிய எவ்வளவு காலகட்டத்தில் மேற்படி பேச்சுவார்த்தை என்னிடம் இரண்டாம் பிரதிவாதி செய்தார் என்றால் ஞாபகம் இல்லை. இரண்டாம் பிரதிவாதி தனது இடத்தில் வேலி மற்றும் கிணறு அமைப்பதற்கு முன்பே என்னிடம் கிரையத்திற்கு பேச்சுவார்த்தை நடத்தினார் என்றால் இல்லை.

6) மொத்த வழக்கு சொத்திற்கும் கிழக்கு பக்கம் உள்ள மயானத்திற்கு செல்ல வழக்கு சத்திற்கு அடுத்ததாக உள்ள நீரோடையை நீரோடையை கடந்து அதற்கு அடுத்துள்ள கிராமங்களுக்கும் செல்ல அந்த பாதையை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். நீரோடையில் தண்ணீரானது மழைக்காலங்களில் மட்டுமே வடியும் என்றால் சரியல்ல. மலையிலிருந்து எப்போதும் தண்ணீர் வந்துகொண்டே இருக்கும். மேற்படி நீரோடையில் வண்டி செல்வதற்கு பாலம் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அமல்ராஜ் சொத்து வழியாகவும், நீரோடை வழியாகவும் எனது சொத்திற்கு சென்று வருகிறேன் என்றால் அமல்ராஜ் சொத்து வழியாக தான் சென்று வருகிறேன், நீரோடை பாதையை பயன்படுத்துவதில்லை.

7) வாதிகளுக்கும், 2 ம் பிரதிவாதிக்கும் கூட்டுப்பாத்தியப்பட்ட சர்வே எண்.443/3E சொத்திற்கு செல்ல பாதையில்லை என்றால் சரிதான். சர்வே எண்.443/3E சொத்திற்கு பாதையில்லை என்னும்போது அதற்கு பாதை கேட்டால் எனது சொத்திலிருந்து பாதை அமையும் என்பதால் வேண்டுமென்றே அந்த விபரங்களை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது சொத்தில் 120 மீட்டருக்கு பாதை அமையும் என்பதால் தான் அந்த விபரங்களை மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது வழக்குப்படி 1ம் பிரதிவாதியின் சொத்து வழியாக எனது 1வது இலக்கச் சொத்திற்குள்ளும் சேர்த்து தான் வண்டிப்பாதை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல, வேலி அமையாததால் வரப்பு வழியாக சென்று வந்தேன்.

8) வழக்கு எல்லா சொத்துக்களுக்கும் வரப்பு வழியாக தான் சென்று வந்தோம் என்றாலும், தனியாக வண்டிப்பாதை வழக்கு சொத்துக்களுக்குள் ஏற்படவில்லை என்றாலும் சரியல்ல. 2ம் பிரதிவாதி சொத்தை கிரையம் வாங்கி சர்வே செய்து உட்பிரிவு செய்யப்பட்டு மரக்கன்றுகள் நடப்பட்டு அது சிறிது வளர்ந்ததற்கு பிறகு தான் நான் பாதை கேட்டு 2ம் பிரதிவாதியிடம் பிரச்சினை செய்தேன் என்றால் சரியல்ல. வண்டிப்பாதை இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், வண்டிப்பாதையை அழித்துவிட்டார்கள், அதனால் தாக்கல் செய்ய இயலவில்லை. வண்டிப்பாதை இருந்திருந்தால் ஆவணங்களில் அந்த வண்டிப்பாதையை காட்டி தான் ஆவணங்கள் ஏற்படுத்தியிருப்பார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல் வழக்கு சொத்துக்களுக்குள் வண்டிப்பாதை இல்லை என்பதால் தான் பாகப்பிரிவினை ஆவணத்தில் அதை குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரியல்ல.

9) நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால், தெரியும். நீதிமன்ற ஆணையர் அறிக்கையில் 3வது இலக்க சொத்திற்கு அமல்ராஜ் சொத்து வழியாக நான் சென்றுவருவதாக தான் குறிப்பிட்டுள்ளார், அதற்கு நான் ஆட்சேபணை தாக்கல் செய்தேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இரண்டாம் பிரதிவாதி வேலியை அமைத்ததால் நான் முத்துலட்சுமி மற்றும் அமல்ராஜ் சொத்து வழியாக சென்று வருவதாக எனது வழக்குரையிலோ, பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆரம்ப காலங்களில் இருந்தே நான் அவ்வாறு தான் சென்று வந்தேன் என்பதால்தான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10) வாதிகளின் சொத்துக்களை கிரையம் வாங்கிக் கொள்ள சொல்லி வாதிகள் 2ம் பிரதிவாதியிடம் பேசினார்கள் என்றால் இல்லை. இரண்டாம் பிரதிவாதியிடம் எங்கள்

சொத்துக்களை அதிக தொகைக்கு கிரையம் பேசினோம் என்றாலும் அதை அவர் மறுத்து விட்டதால் அவர் மீது கோபம் கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்துகளுக்கும் முறையாக பாதை கோரி பரிகாரம் கோராமல் 1,2 பிரதிவாதிகளின் சொத்துக்களில் மட்டும் பாதை கோரி பொய்யான சங்கதிகளை தெரிவித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

11) வழக்கு சொத்துக்கள் வரப்பு வழியாக சென்று தான் அனுபவம் செய்யப்பட்டது என்றாலும், வண்டிப்பாதை போன்ற அமைப்பு இல்லை என்றாலும் சரியல்ல, வழக்கு சொத்துக்களுக்கு தெற்குப்பக்கமும், வடக்குப்பக்கமும் உள்ள ஓரங்களில் வண்டிப்பாதை அமைக்கப்பட்டு சொத்துக்கள் அனுபவம் செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னிடும் வாதிகளாகிய நாங்கள் 1, 2 பிரதிவாதிகளுடன் பேசியதில் பேச்சுவார்த்தை உடன்படாததால் 1ம் பிரதிவாதியின் மகளை தூண்டிவிட்டு பிரதிவாதிகள் மீது தனி சிவில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சர்வே எண்.443/3E சொத்துக்களுக்கு சென்று வர 1ம் லக்க சொத்தில் வண்டிப் பாதை ஏற்படுத்தித் தர நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன், அதேபோல் அவர்களும் வண்டிப்பாதைக்கு இடம் விட வேண்டும். ஏற்கனவே 1வது லக்க சொத்தில் வண்டிப்பாதை இருந்ததா என்றால் இல்லை, தற்போது ஏற்படுத்தித்தர தயாராக உள்ளேன். 1வது லக்க சொத்தைப் போன்றே வழக்கு சொத்துக்களில் வண்டிப்பாதை இல்லை என்றாலும், பிரதிவாதிகள் என்னுடைய பேச்சைக் கேட்க வேண்டும் என்பதற்காக வாதிகளை தூண்டிவிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளை துன்புறுத்த வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

**வேண்டுகோளின்படி 1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

மேற்படி வாக்குமூலத்தை, சாட்சி சொல்ல-சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு 11.02.2026 ம் தேதி என் முன்னிலையில் கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2026.02.11 18:39:39 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

நத்தம்